Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/ 2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, ஜனவரி 14 2024 | இதழ் 182

# சென்னை - மதுரை ரூ.17,262 சென்னை- - கோவை ரூ.14,689 பொங்கல் பண்டிகை தொடர் விடுமுறை: விமான டிக்கெட் 5 மடங்கு உயர்வு பஸ், கார்களில் 4 லட்சம் பேர் பயணம்

சென்னை, 14 ஜனவரி 2024: பொங்கல் பண்டிகை தொடர் விடுமுறையை முன்னிட்டு இன்று விமான டிக்கெட் கட்டணங்கள் பல மடங்கு உயர்ந்தன.

சென்னையில் இருந்து மதுரை, திருச்சி, கோவை செல்ல விமானக் கட்டணம் 5 மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் பொங்கல் பண்டிகை, வரும் திங்கள்கிழமை 15ஆம் தேதியில் இருந்து, 17ஆம் தேதி புதன்கிழமை வரை சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. அதோடு சனி, ஞாயிறு சேர்ந்து வருவதால், தொடர்ச்சியாக 5 நாட்கள் விடுமுறை உள்ளது.

இதையடுத்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இருப்பவர்கள், பொங்கல் பண்டிகையை கொண்டாட தங்களுடைய சொந்த ஊர்களுக்கு செல்கின்றனர். பஸ், ரெயில்களில் முன்பதிவு செய்ய முடியாதவர்கள், இறுதி நேரத்தில் சொந்த ஊர் செல்ல, விமான பயணங்களை மேற்கொள்கின்றனர். இதனால் சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் இருந்து, தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவை, சேலம் ஆகிய நகரங்களுக்கு செல்லும் விமானங்களில் கடந்த ஓரிரு நாட்களாகவே பயணிகள் கூட்டம் அதிகமாக உள்ளது.

இதை அடுத்து சென்னையில் இருந்து, இந்த நகரங்களுக்கு செல்லும் உள்நாட்டு விமானங்களில், டிக்கெட் கட்டணங்கள் பல மடங்கு, உயர்ந்து உள்ளன. ஆனாலும் கட்டண உயர்வை குறித்து கவலைப்படாமல், பயணிகள் போட்டி போட்டுக்கொண்டு, கூடுதல் கட்டணங்கள் செலுத்தி, விமான பயணம் செய்கின்றனர்.

சென்னை, தூத்துக்குடி வழக்கமான கட்டணம் ரூ.3,624. இன்று கட்டணம் ரூ.13,639.

சென்னை- மதுரை வழக்கமான கட்டணம் ரூ.3,367. இன்று ரூ.17,262. சென்னை - திருச்சி வழக்கமான கட்டணம் ரூ.2,264. இன்று கட்டணம் ரூ.11,369. சென்னை-



கோவை வழக்கமான கட்டணம் ரூ.3,315. இன்று ரூ.14,689. சென்னை- சேலம் வழக்கமான கட்டணம் ரூ.2,290. இன்று ரூ.11,329. இதேபோல் பல மடங்கு கட்டண உயர்வு இருந்தாலும், பயணிகள் பலர் டிக்கெட் கிடைக்காமல் தவிக்கின்றனர்.

பொங்கல் பண்டிகை நகர்ப்புறங்களைவிட கிராமப் பகுதிகளில் தான் உற்சாகமாக கொண்டாடப்படும். அதனால் தொழில் மற்றும் வேலை நிமித்தமாக வெளியூர்களில் இருப்பவர்கள் பொங்கலை கொண்டாட சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம். அந்த வகையில் சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் வசிக்கும் மக்கள் பொங்கலை கொண்டாட நேற்றே பயணத்தை தொடங்கிவிட்டனர். சொந்த ஊர்களுக்கு செல்லும் மக்களுக்காக அரசு சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. ரெயில்கள் அனைத்தும் நிரம்பி விட்டதால் ஏழை, நடுத்தர மக்கள் அரசு பஸ்களை நம்பி உள்ளனர். அவர்கள் நெரிசல் இல்லாமல் பயணம் செய்வதற்கு வசதியாக விரிவான ஏற்பாடுகளை அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் செய்துள்ளனர்.

கோயம்பேடு, கிளாம்பாக்கம் புதிய பஸ் நிலையம் உள்ளிட்ட 6 பஸ் நிலையங்களில் இருந்து சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. நேற்று எதிர்பார்த்ததைவிட மக்கள் அதிகளவு பயணம் மேற்கொண்டனர். வழக்கமாக இயக்கப்படும் 2100 பஸ்கள் தவிர சிறப்பு பஸ்கள் 1260 என மொத்தம் 3946 பஸ்கள் இயக்கப்பட்டன. இவற்றில் நள்ளிரவு 12 மணி நிலவரப்படி 2 லட்சத்து 17 ஆயிரம் பேர் பயணம் செய்தனர்.

இன்று முதல் பள்ளி, கல்லூரிகள், அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை விடப்பட்டதால் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்வோரின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

இன்று காலையில் இருந்தே பஸ் மற்றும் ரெயில் நிலையங்களில் கூட்டம் அலைமோதியது. பகல் நேர ரெயில்கள் அனைத்தும் நிரம்பி சென்றன. சிறப்பு ரெயில்களிலும் நிற்ககூட முடியாத நிலை ஏற்பட்டது. மாலையில் இருந்து மக்கள் கூட்டம் அலை கடல் போல் திரண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடும்பம் குடும்பமாக மக்கள் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டு சென்றனர். மக்கள் கூட்டத்தை சமாளிக்க இன்று 4000 அரசு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. வழக்கமான 2100 பஸ்களும் 1900 சிறப்பு பஸ்களும் இயக்க தயார் நிலையில் உள்ளன. அரசு பஸ்களில் பயணம் செய்ய சுமார் 2 லட்சம் பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

இதுதவிர 1600 ஆம்னி பஸ்களும் இயக்கப்படுகின்றன. அதில் பயணம் செய்ய 65 ஆயிரம் பேர் முன்பதிவு செய்து உள்ளனர்.

மேலும் சென்ட்ரல், எழும்பூர், தாம்பரம் நிலையங்களில் இருந்து 1 லட்சத்திற்கும் மேலான பயணிகள் பயணம் செய்ய உள்ளனர். முன்பதிவு செய்தும், முன்பதிவு இல்லாத பெட்டிகளில் ஆயிரக்கணக்கானவர்கள் பயணிக்கின்றனர்.

மேலும் கார், வேன் போன்ற சொந்த வாகனங்களிலும் வெளியூர்களுக்கு புறப்பட்டு செல்கிறார்கள். சென்னையை ஒட்டிய மாவட்டங்களுக்கு இருசக்கர வாகனங்களில் பலர் பகலில் புறப்பட்டு சென்றனர். சென்னையில் இருந்து பஸ், ரெயில், கார், மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் சொந்த ஊர்களுக்கு சுமார் 4 லட்சம் பேர் இன்று பயணம் செய்வார்கள் என்று கணக்கிடப்பட்டு உள்ளது.

வெளியூர் பயணம் அதிகரித்துள்ளதால் சென்னையிலும் புறநகர் பகுதியிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. பஸ், கார்களின் சாலைப் பயணம் அதிகரித்துள்ளதால் மதுரவாயல், ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி, பெருங்களத்தூர், கிளாம்பாக்கம், கோயம்பேடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

# சொந்த ஊருக்கு படையெடுக்கும் மக்கள்: திருச்சி நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல்

சென்னை, 14 ஜனவரி 2024: பொங்கல் பண்டிகையை கொண்டாட சென்னையிலிருந்து ஏராளமானவர்கள் சொந்த ஊருக்கு செல்வதால் சென்னை திருச்சி நெடுஞ்சாலையில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

பண்டிகையை கொண்டாட பள்ளி, கல்லூரி, தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு தொடர் 5 நாட்கள் விடுமுறை



அளிக்கப்பட்டு உள்ளது. தொடர் விடுமுறையின் காரணமாக சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு தங்களது சொந்த ஊர்களுக்கு சென்று பொங்கல் பண்டிகை கொண்டாட கார், வேன், அரசு மற்றும் தனியார் பஸ் மூலம் பொதுமக்கள் செல்கின்றனர். சென்னையில் இருந்து சென்னை- திருச்சியின் தேசிய நெடுஞ்சாலையில் வழியாக செல்லும்பொழுது அச்சரப்பாக்கம் அடுத்த ஆத்தூர் சுங்கச்சாவடியில் சுங்க கட்டணம் செலுத்திய பிறகு வாகனங்கள் அனுமதிக்கப்படுவதால் நீண்ட வரிசையில் காத்திருந்து வாகனங்கள் செல்வதால் போக்குவரத்து பாதிப்பும், நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

நேற்று மாலை முதல் வாகனங்கள் செல்ல ஆரம்பித்தன. வாகனங்கள் அதிகமாக செல்லும்போது சுங்கச்சாவடியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும்போது போலீசார் உடனடியாக கட்டணம் இல்லாமல் அனுப்பி வருகின்றனர். தொடர்ந்து இன்று காலை முதல் வாகனங்கள் அதிக அளவில் வருவதால் கூடுதலாக இரண்டு வசூல் செய்யும் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, இன்று முழுவதும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என போலீசார் தரப்பில் கூறப்படுகிறது.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# தமிழ்நாடு டிஜிபி மற்றும் சென்னை கமிஷனர் காவல் ஆளிநர்கள் மற்றும் காவலர் குடும்பத்தினரின் பொங்கல் விழாவில் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினர்

சென்னை, 14 ஜனவரி 2024: தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், அவரது மனைவி மம்தா ஜிவால் மற்றும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், அவரது மனைவி ஷில்பம் கபூர் புனித தோமையர்மலை ஆயுதப்படை மைதானத்தில், சென்னை பெருநகர காவல், ஆயுதப்படை-2 சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டு, ஆயுதப்படை காவல் அதிகாரிகள், காவலர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருடன் பொங்கல் வைத்து கொண்டாடினர்.

மேலும், காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆகியோர் புனித தோமையர்மலை ஆயுதப்படை சார்பில் அமைத்துள்ள மூலிகை தோட்டத்தை பார்த்து பாராட்டினர். பின்னர் தமிழர் திருநாளான பொங்கலை முன்னிட்டு, காவல் அதிகாரிகள், ஆளிநர்கள், அவரது குடும்பத்தினருக்கான ரங்கோலி (கோலப்போட்டி), கயிறு இழுத்தல், உறியடித்தல் உள்ளிட்ட விளையாட்டு போட்டிகளை துவக்கி



வைத்து கண்டு ரசித்தனர். மேலும், காவல் ஆளிநர்களின் ஆயுத கவாத்து மற்றும் சாகசங்களையும், பரதநாட்டியம், சிலம்பம், கரகாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளை கண்டு ரசித்தனர். பின்னர் பொங்கல் விழா விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற காவல் ஆளிநர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கோப்பைகள், பரிசுகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கினர். இறுதியாக, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆகியோர் காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் காவல் குடும்பத்தினருக்கு பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர்கள் பிரேம் ஆனந்த் சின்ஹா, (தெற்கு), முனைவர் பி.கே.செந்தில்குமாரி (மத்தியகுற்றப்பிரிவு) காவல் இணை ஆணையாளர்கள் எம்.ஆர்.சிபிசக்ரவர்த்தி, (தெற்கு மண்டலம்), ஏ.கயல்விழி, (தலைமையிடம்), காவல் துணை ஆணையாளர்கள் மருத்துவர் எம்.சுதாகர் (புனித தோமையர்மலை), ஐ.ஜெயகரன் (ஆயுதப்படை-1), எஸ்.அன்வர் பாஷா (ஆயுதப்படை-2), எம்.ராதாகிருஷ்ணன் (மோட்டார் வாகனப்பிரிவு), காவல் அதிகாரிகள், காவலர்கள் மற்றும் காவலர் குடும்பத்தினர் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

# வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றும் தி.மு.க. அரசுக்கு கண்டனம் 40 தொகுதிகளிலும் அ.தி.மு.க. வெற்றி பெற அல்லும் பகலும் உழைப்போம்

## எஸ்.ஆர்.விஜயகுமார் தலைமையில் நடந்த மாணவர் அணி கூட்டத்தில் சூளுரை

சென்னை, 14 ஜனவரி 2024: நடைபெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் அண்ணா தி.மு.க. வெற்றி பெற அல்லும் பகலும் அயராது பாடுபட அண்ணா தி.மு.க. மாணவர் அணி சூளுரைத்துள்ளது.



அண்ணா தி.மு.க. மாணவர் அணி ஆலோசனைக் கூட்டம் மாணவர் அணி செயலாளரும், முன்னாள் எம்.பி.யுமான எஸ்.ஆர்.விஜயகுமார் தலைமையில் நடந்தது.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: அன்னைத் தமிழுக்காக இன்னுயிர் நீத்து உயிர்த் தியாகம் செய்திட்ட மொழிப்போர்த் தியாகிகளை நினைவு கூறும் வகையில், வருகின்ற ஜனவரி 25- ம் தேதி கழக மாணவர் அணியின் சார்பில், எடப்பாடி பழனிசாமியின் வழிகாட்டுதலோடு தமிழகம் முழுவதும் கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டத் தலைநகரங்களில் 'வீரவணக்க நாள்' அனுசரிப்பினை சிறப்பான முறையில் நடத்துவது என கழக மாணவர் அணி தீர்மானிக்கிறது.

விடியா அரசின் முதலமைச்சராக ஸ்டாலின் பதவியேற்ற நாள் முதலாக இன்றுவரை ஒவ்வொரு நாளும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகள், போக்சோ குற்றங்கள், வழிப்பறிச் செயின் பறிப்பு, நில அபகரிப்பு, பெட்ரோல்

குண்டு வீச்சு, சட்டவிரோத வெடிமருந்து கலாச்சாரம், ஆதாயக் கொலைகள், ஆணவக் கொலைகள், கஞ்சா, ஹெராயின், கள்ளச் சாராயம், போலி மதுபானம், தனியாக வசிக்கும் முதியோர்கள் தாக்குதலுக்கு ஆளாகி உயிரிழப்பு, கள்ள சாராய சாவுகள், ஆள் கடத்தல், மணல் கொள்ளை, கிராம நிர்வாக அலுவலர் கொலை செய்யப்படுவதும், தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதும், பொதுமக்கள், அரசு அலுவலர்கள் தனியார் உரிமையாளர்கள் தாக்கப்படுவது, கனிமவளக் கொள்ளை, 3,000 உரிமை இல்லாத மதுபான பார்களால் மதுபானக் கொள்ளை போன்ற

சட்டம்-ஒழுங்கை சீர்கேடு அடையச் செய்திடும் சம்பவங்கள் விடியா திமுக ஆட்சியில் ஏராளமாக நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருந்த நிலையில் இன்று, விடியா திமுக ஆட்சியில் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் சட்டம்-ஒழுங்கு சீர்கேடு அடைந்து தமிழ் நாடு அமளிப் பூங்காவாக மாறி வருவதை தடுக்கத் தவறிய விடியா திமுக அரசுக்கு, கழக மாணவர் அணி தனது கடும் கண்டனத்தை தெரிவிக்கிறது. சிறுபான்மை மக்களுக்கு

இஸ்லாமிய பெருமக்களுக்கும், கிறிஸ்தவ பெருமக்களுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நாடு போற்றும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி அச்சமுதாயத்தின் மீது மிகுந்த நன்மதிப்பை வெளிப்படுத்தியது. ஆனால், விடியா திமுக அரசோ, சிறுபான்மை

இன மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக கழக அரசு கொண்டு வந்த பல்வேறு திட்டங்களை முடக்கி இருக்கிறது. உதாரணத்திற்கு, ஜெருசலேம்

புனித யாத்திரை செல்வதற்கு வழங்கி வந்த நிதியுதவியை விடியா திமுக அரசு கடந்த இரண்டரை ஆண்டுகளாக நிறுத்தி வைத்துள்ளது.

ஆண்டுதோறும் புதிய ஹஜ் பயணம் செல்லும் இஸ்லாமியப் பெருமக்களுக்கு கழக அரசு வழங்கிய நிதியுதவியை விடியா திமுக அரசு நிறுத்தி வைத்துள்ளது அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியப் பெருமக்களுக்கான நிதியுதவி தொடரவும், அது உயர்த்தப்படவும், பயணம் மேற்கொள்வோரின் எண்ணிக்கையை உயர்த்தவும், அமைய இருக்கும் கழக அரசு உறுதி பூண்டுள்ளது.

அண்ணா தி.மு.க. மீண்டும் ஆட்சி அமையும்போது, ஜெருசலேம் புனிதப் பயணம் செல்லும் திட்டம் புத்துயிர் பெறும். புனிதப் பயணம் செல்லும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை இருமடங்காக உயர்த்தப்படும். கல்லறைத் தோட்டப் பிரச்சனை தீர்க்கப்படும் என்று எடப்பாடியார் கிறிஸ்துமஸ் பெருவிழாவில் அளித்த உறுதி நடைமுறைக்கு வரும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வாக்குறுதிகளை

அம்மாவின் தலைமையிலான ஆட்சியின் வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டங்களான, தாலிக்குத் தங்கம் 8 கிராம், அத்துடன் நிதியுதவியாக 50,000/- மற்றும் 25,000/- ரூபாய் வழங்கும் திட்டம்; மாணவர்களுக்கான

மடிக் கணினி வழங்கும் திட்டம்; 2000 அம்மா மினி கிளினிக் திட்டம்; பணிக்குச் செல்லும் மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் வழங்கும் திட்டம்; ஏழைகளுக்கு பசிப்பிணி தீர்த்து வரும் அம்மா உணவகம் திட்டம்; கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித்தொகை; எடப்பாடியார் செயல்படுத்திய குடிமராமத்துத் திட்டம் என்று, மக்கள் போற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டங்களை நிறுத்தியும், நீர்த்துப்போகச் செய்தும், மூடுவிழா கண்டும், தொடர்ந்து மக்கள் விரோதப் போக்கை கடைபிடித்து வருவதோடு, அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் 1,000/- ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துவிட்டு, பின்னர் தகுதி வாய்ந்தவர்களுக்கு என்று மாற்றி, தனது வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்ட விடியா திமுக அரசுக்கு, கழக மாணவர் அணி தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

அண்ணா தி.மு.க. நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை எதிர்கொண்டு மகத்தான வெற்றிச் சரித்திரம் படைப்பதற்கும், இந்திய அரசியல் சரித்திரத்தில் இடம் பெறுவதற்கும் தமிழ் நாட்டின் ஜீவாதார உரிமைகளை மீட்டெடுப்பதற்கும், கழகப் பொதுச் செயலாளர், எடப்பாடி பழனிசாமி வகுத்துத் தரும் தேர்தல் வியூகங்களின்படி கழக மாணவர் அணியினர் அல்லும் பகலும் பாராது, கண் துஞ்சாது கடமை உணர்வோடு தேர்தல் பணியாற்றி, புதுச்சேரி உள்ளிட்ட 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றிக் கனியைப் பறித்திட கழக மாணவர் அணி சூளுரை ஏற்கிறது.

இந்த இயக்கத்தை சீர்குலைத்து, எதிரிகளின் வால் பிடிக்கும் துரோகக் கும்பலின் நாச வேலைகளை முறியடித்து, நீதிமன்றத்தின் மூலம் சட்டப் போராட்டம் நடத்தி வழக்குகளை எதிர்கொண்டு, அண்ணா தி.மு.க.வை மீட்டெடுத்த எடப்பாடியாரை மாணவர் அணி நன்றியோடு வணங்குகிறது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# உலகநாயகன் கமல்ஹாசனும் ஆர்.மஹேந்திரனும் இணைந்து தயாரிக்கும் கேஎச்237 திரைப்படத்தி ல்ஸ்டண்ட் சகோதரர்கள் அன்பறிவ் இணைகிறார்கள்




சென்னை, 14 ஜனவரி 2024: ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இண்டர்நேசனல் நிறுவனம் தனது ஐம்பத்தைந்தாவது தயாரிப்பாக கேஎச்237 திரைப்படத்தை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது. உலகநாயகன் கமல்ஹாசன் கதாநாயகனாக நடிக்கும் இந்தத் திரைப்படத்தின் மூலம் ஸ்டண்ட் சகோதரர்களான அன்பறிவ் இயக்குனர்களாக அறிமுகமாகிறார்கள்.

ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இண்டர்நேசனல் சார்பாக இந்தப் படத்தை கமல்ஹாசனும் ஆர்.மகேந்திரனும் தயாரிக்கிறார்கள்.

இந்தியத் திரையுலகின் ஸ்டண்ட் பிரிவில், அன்பறிவ் முக்கிய இடம் வகிக்கிறார்கள். ஸ்டண்ட் இயக்குனர் என்ற இடத்திலிருந்து அவர்கள் திரைப்பட இயக்குனர்களாக முன்னேறுவது அவர்களுடைய அர்ப்பணிப்புக்கும், திறமைக்குமான நற்சான்று. கேஎச்237 திரைப்படத்தின் வழியாக ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இண்டர்நேசனல் நிறுவனத்தின் சிறந்த திரைப்படப் பங்களிப்பு, இன்னும் மேம்படும். அன்பு மணியும், அறிவு மணியும் இந்தப் படத்தை இயக்குவதில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி.

திரைப்பட உருவாக்கத்தில் இதன் மூலம் ஒரு புதிய சகாப்தம் தொடங்குகிறது. ஸ்டண்ட் காட்சிகளை நேர்த்தியாக உருவாக்குவதற்காகக் கடுமையாக உழைக்கும் அன்பறிவ் இணையின் அர்ப்பணிப்பு இந்தத் திரைப்படத்திலும் நிச்சயம் வெளிப்படும்.

சிறந்த நடிகரும், தயாரிப்பாளரும், இயக்குனருமான கமல்ஹாசன்: "திறமைசாலிகளாக அறியப்படும் இருவர் இயக்குனராக கேஎச்237 படத்தில் அவதாரம் எடுப்பதில் பெருமைப்படுகிறேன். ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இண்டர்நேசனல் சார்பாக அவர்களை வரவேற்கிறேன்," என்றார்.

ஸ்டண்ட் இயக்குனர்கள் அன்பறிவ்:

"அற்புதங்கள் நிகழ்கின்றன. உலகநாயகன் கமல்ஹாசன் அவர்களை இயக்கும் மிகப்பெரிய வாய்ப்பு அமைந்தது கனவைப் போலிருக்கிறது" என்றார்கள். அதிரடிக் காட்சிகள் நிறைந்த படமாக கேஎச்237 ரசிகர்களுக்கும், திரைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் ஓர் அற்புதமான காட்சியனுபவமாக இருக்கும் என்பது உறுதி. உலகநாயகன் கமல்ஹாசன் ரசிகர்களுக்கு இது ஒரு விருந்தாக அமையும். புதிய இயக்குனர்களின் திறமையைக் கண்டறிந்து, திரைப்படங்களைத் தயாரிப்பதன் மூலம் உலகநாயகன் அவர்களை மிகச் சிறந்த இயக்குனர்களாக உருவாக்குகிறார்.

மிகுந்த உற்சாகத்துடனும், மிகப்பெரிய எதிர்பார்ப்புடனும், இரட்டையர்கள் அன்பறிவ் உலகநாயகன் கமல்ஹாசனுடன் இணைந்து, இயக்குனர்களாகத் தங்கள் திறமையை வெளிப்படுத்தக் காத்திருக்கிறார்கள். மிகச்சிறந்த படங்களை

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

## சென்னை பெருநகர காவல் ஆணையாளர் காவல் ஆணையாளர் அலுவலகம் மற்றும் இராஜரத்தினம் மைதானம் ஆகிய இடங்களில் காவல் ஆளிநர்கள் மற்றும் காவலர் குடும்பத்தினருக்காக நடத்தப்பட்ட பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பொங்கல் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.



சென்னை, 14 ஜனவரி 2024: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், தனது மனைவி ஷில்பம் கபூருடன் வேப்பேரி, காவல் ஆணையாளர் அலுவலகத்தில் சென்னை பெருநகர காவல் துறை, மத்திய குற்றப்பிரிவு சார்பில் நடத்தப்பட்ட பொங்கல் விழாவில் கலந்து கொண்டு, பொங்கல் பாரம்பரிய உடைகளுடன் பங்கேற்ற காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுடன் பொங்கல் வைத்து கொண்டாடினார். மேலும், பொங்கல் விழாவையொட்டி, நடைபெற்ற ரங்கோலி உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற ஆண் மற்றும் பெண் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையாளர் முனைவர் பி.கே.செந்தில்குமாரி, மத்திய குற்றப்பிரிவு துணை ஆணையாளர்கள் எஸ்.ஆரோக்கியம், வி.வி.கீதாஞ்சலி (சைபர் கிரைம்), முனைவர் ஜி.வனிதா , கூடுதல் துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள், காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்கள் கலந்து கொண்டனர்.

எழும்பூர், இராஜரத்தினம் மைதானத்தில் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், தனது மனைவி ஷில்பம் கபூருடன் காலை எழும்பூர், ராஜரத்தினம் மைதானத்தில், சென்னை பெருநகர காவல், ஆயுதப்படை-1 சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டு, ஆயுதப்படை காவல் அதிகாரிகள், காவலர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருடன் பொங்கல் வைத்து கொண்டாடினார்.

மேலும், மைதானத்தில் கிராமிய கலை நயத்துடன் அமைக்கப்பட்டிருந்த கோயில், நாற்று நடுதல், மண்பானை செய்தல், பொங்கல் வைத்து சாமி கும்பிடுதல் போன்ற குடில்கள், கிளி ஜோசியம், கரும்பு விற்பனை கடைகள் மற்றும் மாட்டு தொழுவம் ஆகிய அரங்குகளை காவல் ஆணையாளர் அவர்கள் ரசித்து பார்வையிட்டார், பின்னர் தமிழர் திருநாளான பொங்கலை முன்னிட்டு, காவல் அதிகாரிகள், ஆளிநர்கள், அவரது குடும்பத்தினருக்கான ரங்கோலி (கோலப்போட்டி), கயிறு இழுத்தல், உறியடித்தல், லக்கி கார்னர், நடனப் போட்டி, சிறுவர்களுக்கான ஓட்ட பந்தயம், சாக்கு ஓட்டம், போன்ற விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்து கண்டுகளித்தார். மேலும் ஆண் மற்றும் பெண் காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்களது குழந்தைகளின் பரதநாட்டியம், சிலம்பம், கிராமிய நடனம், குழந்தைகள் நடனம், பறை இசை நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகளை கண்டு களித்தார். மேலும் மல்லர் கம்பம் சாகச நிகழ்ச்சியை கண்டுகளித்து, பொங்கல் விழா விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற காவல் ஆளிநர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கோப்பைகள், கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களுக்கு பரிசுகளை காவல் ஆணையாளர் அவர்கள் வழங்கினார். இறுதியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் காவல் அதிகாரிகள் மற்றும் காவலர் குடும்பத்தினருக்கு பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர்கள் ஆர்.சுதாகர், (போக்குவரத்து), கபில்குமார் சி சரட்கர், (தலைமையிடம்), முனைவர் பி.கே.செந்தில்குமாரி (மத்தியகுற்றப்பிரிவு) காவல் இணை ஆணையாளர்கள் ஏ.கயல்விழி, (தலைமையிடம்), ஜி.தர்மராஜன், (கிழக்கு மண்டலம்), என்.தேவராணி, (போக்குவரத்து/வடக்கு), டி.மகேஷ்குமார், (போக்குவரத்து/தெற்கு), காவல் துணை ஆணையாளர்கள், காவல் அதிகாரிகள், காவலர்கள் மற்றும் காவலர் குடும்பத்தினர் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

## செல்லம்மாள் மகளிர் கல்லூரியில் பாரம்பரிய பொங்கல் திருவிழா 2024



சென்னை, 14 ஜனவரி 2024: சென்னை கிண்டியில் உள்ள செல்லம்மாள் மகளிர் கல்லூரியில் 11/1/2024 அன்று பாரம்பரிய பொங்கல் திருவிழா மிகச் சறப்பாக கொண்டாடப்பட்டது.மாவிலையில் தோரணம் கட்டி ,வண்ண வண்ண கோலமிட்டு, மண் பானையில் பொங்கல் வைக்கப்பட்டது. விழாவில் மாணவியரின் கிராமிய நடனம்,பறையாட்டம்,சிலம்பம் ஆகிய நிகழ்ச்சிகள் கண்களை கவரும் வகையில் அமைந்திருந்தது.இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர்.வே.மலர்விழி சிறப்புரை ஆற்றினார்.ஆட்சிக் குழு உறுப்பினரும் வணிகவியல் துறைத் தலைவருமான முனைவர்.மகாலட்சுமி நட்சத்திரம் வரவேற்புரை ஆற்றினார்.மாணவியர்கள் உற்சாகமாக இவ்விழாவினை கொண்டாடி மகிழ்ந்தனர்.

## 'தமிழர் திருநாள் தையே', ஜேம்ஸ் வசந்தன் இசையில், கவிப்பேரரசு வைரமுத்து வரிகளில், நடிகர்-இயக்குநர் சசிகுமார் தோன்றும் பொங்கல் பாடல் வெளியீடு

சென்னை, 14 ஜனவரி 2024: ஜேம்ஸ் வசந்தன் இசையில் கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ள 'தமிழர் திருநாள் தையே' பொங்கல் பாடலில் நடிகரும் இயக்குநருமான சசிகுமார் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.




அமெரிக்கத் தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பில் முக்கிய பொறுப்பு வகிப்பவரும் தொழிலதிபருமான கால்டுவெல் வேள்நம்பி இந்தப் பாடலின் தேவையை உணர்ந்து இதை தயாரிக்க முன்வந்தார்.

பொங்கல் பண்டிகை, தமிழர்களின் வளமான கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் அதன் மகத்துவத்தை இந்த பாடல் கொண்டாடுகிறது.

'தமிழர் திருநாள் தையே' பாடலில் சசிகுமார் உடன் வேல்முருகன், பிரியங்கா என் கே, அமர்முகம், நந்தினி, கோபிநாத் சாய் லலிதா மற்றும் புவி, ஜேம்ஸ் வசந்தன், கால்டுவெல் வேள்நம்பி உள்ளிட்டோரும் இடம்பெற்றுள்ளனர். முதல் யூனிட் இயக்குநர் பூபேஷ் எஸ். மற்றும் இரண்டாம் யூனிட் இயக்குநர் ராஜா குருசாமி இணைந்து இந்த கண்கவர் வீடியோ பாடலை உருவாக்கியுள்ளனர். ராஜா பட்டாசார்ஜி மற்றும் ஆண்டனி ரூத் வின்சென்ட் ஒளிப்பதிவு செய்துள்ளனர்.

சாபு ஜோசப் படத்தொகுப்பாளராகவும், சங்கீதா பிரபா நடன இயக்குநராகவும் பணிபுரிந்துள்ளனர்.

வேல்முருகன், பாலக்காடு ஸ்ரீராம், பிரியங்கா என் கே, ஷிபி ஸ்ரீனிவாசன், பாரதி கால்டுவெல் மற்றும் அனு ஆனந்த் ஆகியோர் இப்பாடலை பாடியுள்ளனர். இது குறித்து பேசிய ஜேம்ஸ் வசந்தன், "ஒட்டு மொத்த தமிழ் சமூகமும் கொண்டாடும் பொங்கல் திருநாள் குறித்து தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகக் கூடிய வகையிலான சிறந்ததொரு பாடல் இல்லை என்றே சொல்லலாம். உலகமெங்கும் உள்ள தமிழ் சமுதாயத்திற்காக இப்படி ஒரு பாடலை உருவாக்க வேண்டும் என்ற எங்களின் அவாவின் விளைவே 'தமிழர் திருநாள் 'தையே'," என்றார். "தயாரிப்பாளருக்கும் இந்த பாடலுக்கு பங்களித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி. தமிழர்களின் மனங்களில் என்றென்றும் வீற்றிருக்கும் பண்டிகை பாடலாக இது அமையும் என்று நான் நம்புகிறேன்," என்று அவர் மேலும் கூறினார்.

## காணும் பொங்கல் கொண்டாட்டத்தினை முன்னிட்டு சென்னையில் காமராஜர் சாலையில் கீழ்கண்ட போக்குவரத்து மாற்றங்கள்

சென்னை, 14 ஜனவரி 2024: 17/01/2024 அன்று காணும் பொங்கல் கொண்டாட்டத்தினை முன்னிட்டு சென்னையில் அனைத்து சாலைகளிலும் குறிப்பாக காமராஜர் சாலையில் பெருந்திரளான மக்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக சூழ்நிலைக்கு தகுந்தவாறு கீழ்கண்ட போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட உள்ளன.

1. காமராஜர் சாலையில் பொது மக்கள், சாலையில் அதிகமாகும் வரை எந்தவித போக்குவரத்து மாற்றமும் செய்யப்படமாட்டாது.

2. மெரினா கடற்கரைக்கு வரும் வாகனங்கள் காமராஜர் சாலையில் (மெரினா கடற்கரை சாலை) அதிகரிக்கும் போது போர்நினைவுச் சின்னத்தில் இருந்து வரும் வாகனங்கள் வழக்கம் போல் கலங்கரை விளக்கம் நோக்கி அனுமதிக்கப்படும். கலங்கரை விளக்கத்தில் இருந்து வரும் வாகனங்கள் கண்ணகி சிலையில் இடதுபுறமாக கட்டாயமாக திருப்பப்பட்டு பாரதி சாலை பெல்ஸ் சாலை வழியாக வாலாஜா சாலை சென்று தங்கள் இலக்கை அடையலாம்.

3. வாலாஜா சாலையில் இருந்து விக்டோரியா விடுதி சாலை நோக்கி வாகனங்கள் செல்ல தடை செய்தும், பாரதி சாலையில் இருந்து விக்டோரியா விடுதி சாலைக்கு வாகனங்கள் அனுமதிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ( விக்டோரியா விடுதி சாலை ஒரு வழிப் பாதையாக மாற்றப்படும்)

வாகன ஓட்டுநர்கள் அனைவரும் ஒத்துழைப்பு தறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வாகன நிறுத்தம் இடத்தின் ஏற்பாடுகள்

பொதுமக்கள் தங்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு பின்வரும் பார்க்கிங் இடங்கள் ஒதுக்கப்படும்.

1. ஃபோர்ஷோர் சாலை, 2. விக்டோரியா வார்டன் விடுதி, 3. கலைவாணர் அரங்கம் பார்க்கிங், 4. பிரசிடென்சி கல்லூரி, 5. மெட்ராஸ் பல்கலைக்கழகம், 6. டிடி கேந்திராவிற்கு அப்பால் ஆடம்ஸ் சாலை (சுவாமி சிவானந்தா சாலை), 7. எம் ஆர் டி எஸ் - சேப்பாக்கம், 8. லேடி வெலிங்டன் பள்ளி, 9. ராணி மேரி மகளிர் கல்லூரி, 10. சீனிவாசபுரம் லூப் ரோடு / மைதானம், 11. பி டபிள்யூடி மைதானம் (தலைமைச் செயலகம் எதிரில்), 12. செயின்ட் பீட் மைதானம், 13. அன்னை சத்யா நகர், 14. ஈ.வி.ஆர்.சாலை, மருத்துவக் கல்லூரி மைதானம் (வேன் பார்க்கிங்), 15. தலைமைச் செயலகத்தின் உள்ளே (காவல் துறை வாகனங்கள்).

## ஏர் இந்தியா எக்ஸ்பிரஸின் பிரத்தியேக பொங்கல் சலுகை. பண்டிகை கொண்டாட்டம் மற்றும் சேமிப்புடன் பயணத்தைத் தொடங்குங்கள்!

சென்னை, 14 ஜனவரி 2024: ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ், பொங்கல் விழாவைக் கொண்டாடும் வகையில் சிறப்பு சலுகையை அறிவித்திருக்கிறது. 2024 ஜனவரி 15-ம் தேதி வரை மேற்கொள்ளும் சர்வதேச விமானப் பயணங்களுக்கான முன்பதிவுகளுக்கு இந்த சிறப்பு சலுகை வழங்கப்படுகிறது. இந்த முன்பதிவுகளை ஏர் இந்தியா எக்ஸ்பிரஸின் விருதுகளைப் பெற்ற மொபைல் ஆப் மற்றும் அதிகாரப்பூர்வ இணையதளமான ணீவீக்ஷீவீஸீபீவீணீமீஜ்ஜீக்ஷீமீமீ.நீஷீனீ-ல் வாடிக்கையாளர்கள் மேற்கொள்ளலாம். இந்த முன்பதிவானது 27 அக்டோபர் 2024 வரையிலான பயணங்களுக்குப் பொருந்தும். ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் வாடிக்கையாளர்கள் பொங்கல்10 என்ற குறியீட்டைப் பயன்படுத்தி 10% தள்ளுபடியைப் பெறலாம். இந்த தள்ளுபடி சலுகையானது திருச்சிராப்பள்ளியில் இருந்து அபுதாபி, தோஹா, துபாய், குவைத், மஸ்கட், ஷார்ஜா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளை இணைக்கும் சர்வதேச விமானங்களுக்குப் பொருந்தும். மேலும், சிங்கப்பூருடன் சென்னை மற்றும் மதுரை ஆகிய இரு நகரங்களையும் நேரடி விமானங்களுடன் இணைக்கிறது.

ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் தினசரி 300-க்கும் மேற்பட்ட விமானங்களை இயக்கி வருகிறது. இவை 31 உள்நாட்டு மற்றும் 14 சர்வதேச இடங்களுக்கு விமான சேவையை வழங்குகின்றன. ஏர் இந்தியா எக்ஸ்பிரஸின் விமான சேவையில் 35 போயிங் 737 விமானங்கள் மற்றும் 28 ஏர்பஸ் எ320 விமானங்கள் அடங்கிய 63 விமானங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் தனது புதுப்பிக்கப்பட்ட பிராண்ட் அடையாளத்தை வெளியிட்டு இருக்கிறது. இம்முயற்சியின் மூலம் விருந்தினர்களை 'நீங்கள் நீங்களாகவே பறக்கலாம்' என்ற முன்மொழிவுடன் அழைக்கிறது. விருந்தினர்களுக்கு சிறந்த பயண அனுபவத்தை கொடுக்கவேண்டுமென்ற சிந்தனையுடன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, விருந்தினர்கள் தங்கள் பயண அனுபவத்தைத் தங்களது விருப்பத்தேர்வுகளுக்கு ஏற்ப மேற்கொள்ளவும் உதவுகிறது. இந்த விமான நிறுவனம் சூடான கோர்மெர் உணவுகள், சௌகரியமான இருக்கைகள், விமானத்தில் முன்னோடியாக இருக்கும் பொழுதுபோக்கு அம்சமான ஏர்பிலிக்ஸ் மற்றும் பிரத்யேக லாயல்டி பலன்களையும் வழங்குகிறது. ஈடுஇணையற்ற இந்திய அரவணைப்பு உணர்வுடன், அர்த்தமுள்ள உறவுகளை உருவாக்கவும், புதிய வாய்ப்புகளை கொண்டாடவும் உற்சாகத்துடன் அழைக்கிறது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# டிஜிட்டல் கனெக்ஷன் சென்னையில் அதிநவீன எம் எ எ10 தரவு மையத்தைத் தொடங்குகிறது




ப்ரூக்ஃபீல்ட் அஸ்ஸெட் மேனேஜ்மென்ட் ("புரூக்ஃபீல்ட்"), ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மற்றும் டிஜிட்டல் ரியாலிட்டி ஆகியவற்றுக்கு இடையேயான மூன்று வழி கூட்டு முயற்சியான டிஜிட்டல் கனெக்ஷன், 100 மெகாவாட் (எம் டபிள்யூ) கிரிடிகல் ஐ டி சுமை திறனை வழங்கும் முதல் தரவு மைய வளாகத்தை இன்று தொடங்குகிறது. இது சென்னையின் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 10 ஏக்கர் வளாகத்தில் அமைந்துள்ளது, இது சென்னை நகர மையம், விமான நிலையம் மற்றும் பிற முக்கிய சேவைகளுக்கு அருகில் அமைந்துள்ள ஒரு முக்கியமான தொழில்துறை மற்றும் உற்பத்தி மையமாகும். தரவு மையத்தின் முதல் கட்டமான எம்ஏஏ 10 (எம் எ எ10) ஆனது 20 மெகாவாட் ஐடி சுமையை வழங்கும் மற்றும் ஒரு மாடுலர் உள்கட்டமைப்பு வடிவமைப்பைக் கொண்டுள்ளது, இது வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு பணிச்சுமை கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் அவர்களுக்கு ஒற்றை கேபினட்டில் இருந்து பல மெகாவாட் தேவைகள் வரை இடமளித்து அவர்களின் உள்கட்டமைப்பை அதிகரிக்க உதவுகிறது, செயற்கை நுண்ணறிவு (ஏ ஐ) மற்றும் பெரும் மொழி மாடல்கள் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஆதரிக்கும் வகையில் இது பொருத்தப்பட்டுள்ளது. இந்த வசதி, உயர்-அடர்த்தி சக்தி, பொருத்தமான குளிரூட்டும் உள்கட்டமைப்பு மற்றும் ஏ ஐ பணிச்சுமைகளின் இன்டர்கனெக்டிவிடி தேவைகளைப் பூர்த்தி செய்ய தரநிலைப்படுத்திய உள்ளமைப்புகள் மற்றும் அதி-உயர்-சக்தி அடர்த்தி (ஒரு ரேக்குக்கு 70 கிலோவாட் வரை) ஆகியவற்றை வழங்குகிறது.

தமிழ்நாட்டில் அறிவு சார்ந்த தொழில்களின் வளர்ச்சி மூலம் உருவாக்கப்பட்ட விளைபயனான தரவுகளின் உயர்வு மற்றும் அளவு, மாநில அரசிடம் இருந்து பெறும் மூலம், நகரத்தில் தரமான தரவு மைய உள்கட்டமைப்புக்கான அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எம் எ எ10 ஆனது பல்வேறு வாடிக்கையாளர் தேவைகளை நிவர்த்தி செய்து அவர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை வழிசெலுத்த உதவும் வகையில் உருவாக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் அமைச்சர் மாண்புமிகு டாக்டர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள், "டிஜிட்டல் கனெக்ஷனின் முதன்மையான டேட்டா சென்டரின் துவக்க விழாவில் கலந்துகொள்ள எனக்கு அழைப்பு விடுத்ததற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா முழுவதிலும் மிகவும் விருப்பமான தரவு மையமாக சென்னை விரைவாக வெளிவருவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிகழ்வில் ஜியோ, டிஜிட்டல் ரியாலிட்டி மற்றும் புரூக்ஃபீல்ட் போன்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு உண்மையில் பாராட்டுக்குரிய ஒரு இணை முயற்சியாகும். நமது பொருளாதாரத்தின் டிஜிட்டல் மயமாக்கல், ஏற்றுமதியின் கணிசமான வளர்ச்சி மற்றும் ஒரு சேவையக மென்பொருள் (எஸ் எ ஏ எஸ்) ஆகியவற்றால் குறிக்கப்பட்ட டிஜிட்டல் மாற்றத்திற்கு உள்ளாகி வரும் இந்திய நாட்டின் எஸ் எ ஏ எஸ் -இன் தலைநகரமாக சென்னை முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இந்த முன்னேற்றங்களில், பெருகிவரும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நமது சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தரவு மையங்களை நிறுவுதல் மற்றும் விரிவுபடுத்துதல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நான் எதிர்பார்க்கிறேன் என்று டேட்டா சென்டரை துவக்கி வைக்கும் போது கூறினார்.

டிஜிட்டல் கனெக்ஷனின் தலைமை நிர்வாக அதிகாரி சிபி வேலாயுதன் கூறும் போது: "சென்னையில் எங்களது முதல் தரவு மையம் தொடங்கப்பட்டதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். சென்னையை இந்தியாவின் முதன்மையான தரவு மைய ஹப் ஆக மாற்றுவதற்கான மாநில அரசின் அபிலாஷைகளைக் கருத்தில் கொண்டு அம்பத்தூரில் உள்ள இந்த 100 மெகாவாட் வளாகம், தேவையான மின்சாரம், உள்ளூர் பகுதியில் அதிக எண்ணிக்கையிலான நீர்மூழ்கி கேபிள் தரையிறங்கும் நிலையங்கள் இவற்றுடன் சிறந்த நிலையில் உள்ளது. இந்த மிகவும் விரிவாக்கம் கொண்ட இந்த வளாகத்தின் அதிநவீன முதல் கட்டமான எம் எ எ10 இல் தொடங்கி, எங்கள் வாடிக்கையாளர்கள், கூட்டாளர்கள், கிளவுட் மற்றும் சேவை வழங்குநர்கள் இந்தியாவில் தங்கள் வரம்பை விரிவுபடுத்த விரும்பும் இடமாக இதை உருவாக்குவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம். இந்திய உள்கட்டமைப்பு சந்தை குறித்த புரூக்ஃபீல்டின் ஆழமான அறிவு, டிஜிட்டல் ரியாலிட்டியின் தொழில்துறை முன்னணி ஆற்றல்-செயல்திறன் கொண்ட தரவு மைய தள வடிவமைப்பு மற்றும் இயக்க நடைமுறைகள், மிகவும் மீண்டும் செய்யக்கூடிய பரவலான தரவு மைய கட்டமைப்பு (பி. டி. எக்ஸ் டி) அணுகுமுறை மற்றும் உலகளாவிய வாடிக்கையாளர்களுடனான உறவுகள் மற்றும் ஜியோவின் மாபெரும் டிஜிட்டல் மற்றும் இணைப்பு சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் மிகவும் வலுவான நிறுவன உறவுகள் ஆகியவற்றை எம்ஏஏ 10 (எம் எ எ10) பயன்படுத்துகிறது.

6 கண்டங்களில் உள்ள 25+ நாடுகளில் உள்ள 50+ பெருநகரங்களில் 300+ வசதி மையங்களின் தடத்தில் வாடிக்கையாளர்கள், கூட்டாளர்கள், கிளவுட் மற்றும் நெட்வொர்க் சேவை வழங்குநர்களின் வளமான இணைக்கப்பட்ட தரவு சமூகத்தை வழங்கும் டிஜிட்டல் ரியாலிட்டியின் உலகளாவிய தரவு மைய தளமான இந்த வசதி ஒரு முக்கிய சேர்க்கை ஆகும். இந்த ஆண்டு செயல்படுத்தப்பட்டதாக இது இருக்கும், இதனால் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப அவர்களின் டிஜிட்டல் உள்கட்டமைப்பு முழுவதிலும் விரைவாக உள்ளமைப்பு மற்றும் இணைப்புகளை வழங்க முடியும். டிஜிட்டல் கனெக்ஷன், நிறுவன வளர்ச்சிக்கு நிலைத்தன்மை இன்றியமையாதது என்று நம்புகிறது மற்றும் அதன் தரவு மைய மேலாண்மை நடைமுறைகள் சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதை உறுதிசெய்ய புதுமை கலாச்சாரத்தை வளர்க்கிறது. எம் எ எ10 இன் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் செயல்பாட்டு நடைமுறைகள் ஆற்றல் மற்றும் நீர் செயல்திறனை அதிகப்படுத்துதல் மற்றும் வளங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம் நிலைத்தன்மைக் கொள்கைகளால் உந்தப்படுகின்றன. புரூக்ஃபீல்டின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, மேற்கூரை சோலார் பேனல்கள் மூலம் சூரிய சக்தியை பயனாக்கம் செய்வதில் தொடங்கி, முடிந்தவரை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்தவும் இந்த வசதி முயல்கிறது.

# கோலிவுட் ரசிகர்களுக்காக ஒரு பிளாக்பஸ்டரை முதல் நாள் முதல் காட்சியாக ஓரியோ கொண்டுவருகிறது




கோயம்புத்தூர், 14 ஜனவரி 2024: தன்னுடைய சினிமாவைப் கருப்பொருளாகக் கொண்ட லிமிட்டெட் எடிஷன் தொகுப்புகளின் மூலம் உலகின் நம்பர் 1 மற்றும் இந்தியாவில் மிகவும் விரும்பப்படும் குக்கி பிராண்டான ஓரியோ இந்த ஆண்டு தமிழ் நாட்டின் இதயங்களைக் கவர தயாராகிறது. பொங்கல் என்பது புதிய ஆரம்பங்களின் வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல. இந்தக் காலத்தில் இந்த மாநிலம் சினிமா ஆர்வத்தின் உச்சத்தைத் தொடுகிறது. முதல் நாள் முதல் காட்சி உற்சாகத்தில் ரசிகர்கள் திரை அரங்குகளில் குழுமுகின்றனர். இந்தப் பண்டிகையையும் சினிமாவின் மேலுள்ள ஆவலையும் ஒன்றிணைத்துப் பொங்கல் கொண்டாட்டத்தில் ஒரு மந்திர ஜாலத்தைச் சேர்க்க பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பேக்குகளை ஓரியோ அறிமுகப்படுத்துகிறது. இது குறித்துப் பேசிய மாண்டலெஸ் இந்தியாவின் மார்கெட்டிங் துணைத்தலைவர் திரு. நிதின் சைனி, "தமிழ்நாடு எங்களுக்கு ஒரு முன்னுரிமை வாய்ந்த சந்தையாக உள்ளது. பொங்கல் என்பது இந்த மாநிலத்தின் மிகப்பெரிய பண்டிகை மட்டுமல்லாமல் கோலிவுட் திரைப்படங்கள் வெளியாகும் காலமுமாகும். ஓரியோ எப்போதும் முதிர் வயதின் இறுக்கத்தை விளையாட்டுத்தனத்தால் உடைக்க முயல்கிறது. தமிழ்நாட்டில் அதைச் செய்வதற்கான சிறந்த வழி என்ன? சினிமா என்ற மந்திரத்தின் மூலம் கலாச்சாரத்தில் ஆழமாக வேரூன்றுவதுதான். எங்களுடைய லிமிட்டெட் எடிஷன் ஓரியோ மூவி டிக்கெட் பேக்குகள் மூலம் எங்கள் ஓரியோ பிரியர்களுக்கு முதல் நாள் முதல் காட்சி என்ற பிரத்தியேகமான திரைப்படம் பார்க்கும் அனுபவத்தை வழங்கி அனைவரின் பொங்கல் கொண்டாட்டங்களுக்கும் இனிமையையும் மகிழ்ச்சியையும் அளிப்போம் என்று நம்புகிறோம்."

வேவ்மேக்கர் இந்தியாவின் மேற்கு, வடக்கு & கிழக்கு, தலைமை வாடிக்கையாளர் அதிகாரியும் அலுவலகத் தலைவருமான சேகர் பானர்ஜி மேலும் கூறினார்: "வேவ்மேக்கர் என்ற முறையில் கடந்த காலத்தில் மோண்டலெஸ் பிராண்டுகளின் மைக்ரோ மார்க்கெட்டிங் முயற்சிகள் மூலம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளோம். தென்னிந்தியாவில் உள்ள சினிமா ரசிகர்களைக் கவர்வதே எங்கள் நோக்கம். சென்னையில் பிரத்தியேகமாக ஓரியோவின் ஊக்குவிப்புடன் கேப்டன் மில்லர் திரையிடலுக்காக நாங்கள் பிவிஆருடன் இணைந்தோம். யூடியூப், புக்மைஷோ மற்றும் பேடியெம் போன்ற தளங்களில் திரைப்பட ஆர்வலர்கள் மற்றும் திரைப்பட பார்வையாளர்களை இலக்கு வைத்து அவர்களின் நடத்தையைப் புரிந்துகொள்வதற்காக மெஷ், வேவ்மேக்கரின் சோசியல் லிசனிங் மற்றும் நிகழ்நேர தரவு செயலாக்க திறன்களை நாங்கள் பயன்படுத்தினோம். இது ஓரியோவால் ஊக்குவிக்கப்படும் சென்னையின் சினிமா ஆர்வலர்களுக்கு மகிழ்ச்சியான பொங்கல் அனுபவத்தை உறுதிசெய்கிறது.

குரூப் எக்ஸிகியூட்டிவ் கிரியேட்டிவ் டைரக்டர் மயூரேஷ் துபாஷி கூறினார்: இது இந்தியக் கலாச்சாரத்தில் ஓரியோவை நிலைநிறுத்துவதற்கான இன்னொரு படிநிலையாகும். பொங்கல் பிளாக்பஸ்டர் வெளியீடுகளுடன் தொடர்புடைய ஒவ்வொரு ஊடகத்தையும் நாங்கள் வசப்படுத்தினோம்- ஓ ஓ எச், டிரெய்லர்கள், தியேட்டர்கள், 28 அடி உயரமுள்ள திரைப்பட போஸ்டர் கட்அவுட்களையும் கூட. இது எல்லாமே பிளாக் டிக்கெட்டின் பிடியில் இருந்து தமிழ் திரைப்பட ரசிகர்களை விடுவித்து, அவர்களுக்குப் பிடித்தத் திரைப்படத்தை முதல் நாள் முதல் காட்சியில் கண்டு ரசிக்கும் வாய்ப்பை அவர்களுக்கு வழங்கும் முயற்சியாகும்.

தமிழ்நாட்டின் செழுமையான சினிமா கலாச்சாரத்திற்குப் பாராட்டு செலுத்தும் வகையிலும் சென்னை முழுவதும் உள்ள ஓரியோ ஆர்வலர்களின் இதயங்களை கவரும் நோக்கத்துடனும் ஓரியோ ஒரு சிறப்பு ரூ.35 பேக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. நீல நிற பேக்குகள் தவிர, லிமிடெட் எடிஷன் மூவி டிக்கெட் பேக்குகளையும் ஓரியோ அறிமுகப்படுத்தியுள்ளது. கிளாசிக் பிளாக் மற்றும் வெள்ளை நிறத்தில் அலங்கரிக்கப்பட்ட இந்த 2000 சிறப்பு பேக்குகள் கோல்டன் டிக்கெட்டாக செயல்படும். இது 2000 அதிர்ஷ்டசாலி நுகர்வோருக்குப் பிடித்த படங்களின் பிரத்யேக முதல் நாள் முதல் காட்சிக்கு இலவச நுழைவை வழங்குகிறது. இது பிக் பாஸ்கெட்டில் பிரத்தியேகமாக கிடைக்கும், இந்தப் பேக்குகளைப் பெறும் ரசிகர்கள், தங்களுக்குப் பிடித்த திரைப்படத்தை தங்களுக்குப் பிடித்தமானவர்களுடன் ரசித்துக் கையில் இருக்கும் ஓரியோவின் சுவையை அனுபவிக்கலாம்.

# சுந்தரம் ஃபாசனர்ஸ் நிறுவனம், தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 1,411 கோடி மதிப்புள்ள முதலீடு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசுடன் கையெழுத்திட்டது

**சென்னை, 14 ஜனவரி 2024: இதன்படி சுந்தரம் ஃபாசனர்ஸ் நிறுவனம் தமிழ்நாடு முழுக்க உள்ள அதன் பாடி; மஹிந்திரா வேர்ல்டு சிட்டி, எஸ்.இ.இசட்; வேலப்பன்சாவடி; கும்மிடிப்பூண்டி;ஹோசூர், ஆவியூர்; மதுரை மற்றும் மிட்டாமண்டகப்பட்டு; விழுப்புரம் தொழில்சாலைகளில் புதிய முதலீடு செய்யப்படுகிறது.இதன் மூலம், 1500-க்கும் மேற்பட்ட புதிய வேலை வாய்ப்பு உருவாகிறது.**

